සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

09214

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2009

| | | |
|---|---|---|
| කතෝලික ධර්මය | I, II | පැය තුනයි |
| கத்தோலிக்கத் திரு மறை | I, II | மூன்று மணித்தியாலம் |
| Catholicism | I, II | Three hours |

## கத்தோலிக்கத் திரு மறை I

கவனிக்க :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.
(v) I ஆம் II ஆம் விடைத்தாள்களை ஒன்றாகக் கட்டிக் கையளிக்க.

1. மனிதன் இறைவனை அனுபவத்தில் காண்பது
   (1) விபத்தின்போது
   (2) நல்ல விளைச்சலைப் பெறும்போது
   (3) பௌதிக, உலகம், தனது வாழ்வு வழியாக
   (4) திருவிவிலியம் ,வழியாக

2. இறைவன் மனிதனையும் முழுப்படைப்பையும் படைக்கக் காரணம்
   (1) இறையாட்சியை உலகில் பரப்புவதற்கு
   (2) மனிதன் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு
   (3) உலகைப் பாதுகாக்கவும் ஆண்டு நடத்தவும்
   (4) இறைவனின் அளவுகடந்த அன்பினால்

3. இறைவெளிபாட்டின் நோக்கம்
   (1) கிறிஸ்து வழியாக இறைவனைச் சந்திப்பது
   (2) இறைவன் எழுந்தருளியிருப்பதை வெளிப்படுத்துவது
   (3) இறைவனை ஆராதிக்க வேண்டும் என கற்பிப்பது
   (4) திருவிவிலியம் வாசிப்பதை ஊக்குவிப்பது

4. பாடசாலை மாணவன் இயேசுவின் மனித அவதாரத்தை இவ்வாறு விளக்கினார்
   (A) அழிந்த இறையுறவை மீண்டும் ஏற்படுத்துதல்
   (B) மனிதனை உயர்நிலைக்கு நியமித்தல்
   (C) இறைவனது வார்த்தையினால் மனிதருடன் பேசுதல்
   (D) இறைவனின் வார்த்தையை உலகிற்கு அறிவித்தல்

   இவற்றில் சரியானது
   (1) A, B   (2) B, D   (3) C, D   (4) A, B, C, D

5. இயேசுவின் மறைபணியில் மேன்மையான சந்தர்ப்பம்
   (1) ஐயாயிரம்பேருக்கு உணவளித்தல்
   (2) செபக்கூடத்தில் மறைநூல் அறிஞர் மத்தியில் மறையுரை ஆற்றுதல்
   (3) சீடரைத் தேர்ந்தெடுத்தல்
   (4) துன்பப்பாடுகள், மரணம், உயிர்ப்பு

6. வாழ்வில் பல துன்பம் கஸ்டங்களை அனுபவிக்கும் சிமியோன் மாமா தனது அன்றாட வேதனை நிறைந்த வாழ்வை இவ்வாறு வெளிப்படுத்தினார். கிறிஸ்தவன் என்றரீதியில் இவற்றில் ஏற்ற சிந்தனை எது என அவருக்குக் கூறுவீர் ?
   (1) இதைவிட இறந்து போனால் நல்லது.
   (2) இத்தகைய துன்பம் அனுபவிப்பது பெரும் பாவத்தின் பலன்
   (3) இது இறைவனின் சாபம்
   (4) இத்துன்பங்களின் வழியாக இறைவனின் செய்தி ஒன்று உண்டு.

7. பாஸ்கா மறைபொருள் என்பது
   (1) இயேசுவின் பிறப்பு, மரணம், உயிர்ப்பு
   (2) இயேசுவின் பிறப்பு, மரணம், மறுவாழ்வு
   (3) இயேசுவின் பிறப்பு, மக்களின் மறுதலிப்பு, மரணம்
   (4) இயேசுவின் துன்பம், மரணம், உயிர்ப்பு

[பக். 2 ஐப் பார்க்க

8. யுத்தத்தில் சிக்குண்ட மறையாசிரியர் "யுத்தத்தின்போது நான் காப்பாற்றப்பட்டதற்கான காரணம் இறை பராமரிப்பு" எனக் கூறினார். இக்கூற்றினால் உறுதிப்படுத்தப்படுவது
   (1) பழைய ஏற்பாட்டில் விடுதலைப் பயணக்கதை உண்மை என்பது
   (2) இறைவனில் அவர் கொண்டிருந்த ஆழமான விசுவாசம்
   (3) இறைவன் வல்லமை கொண்டவர் என்பது
   (4) இறைவாக்கினர் படிப்பினையின் முக்கியத்துவம்

9. புகுமுக அருளடையாளங்கள் வழியாக தனது வாழ்க்கைக்கு கிடைக்கும் அருள் வரங்கள் பற்றி ஒரு மாணவி இவ்வாறு கூறினார். இதில் சரியானது
   (1) இறைபிள்ளை, தூய ஆவியின் வல்லமை, இறை ஊட்டம்
   (2) விசுவாசம், அன்பு, இரக்கம்
   (3) அன்பு, எதிர்பார்ப்பு, பொறுமை
   (4) இறைபிள்ளை, மற்றவர்களுடன் ஒப்புரவு, நற்குணங்கள்

10. கிறிஸ்தவ வாழ்வு வளர்ச்சிபெற்று பலன்தர வேண்டுமாயின் அடிக்கடி ........... இடைவெளிக்குப் பொருத்தமானது
   (1) திருச்சபையில் செயற்பாடுடையவராகுதல் வேண்டும்.
   (2) அருளடையாளங்களைப் பெற வேண்டும்.
   (3) துன்பப்படுவோருக்கு இரக்கப்பணி புரிய வேண்டும்.
   (4) திருவிவிலியத்தை வாசிக்க வேண்டும்.

11. "எனது இதயத்தில் தங்கும் ஆண்டவரே" - பங்கில் பிள்ளைகளின் ஒன்றுகூடலுக்கான தலைப்பு இது. இதற்காக ஒரு பாடசாலை மாணவி மேற்கொண்ட செயற்பாடுகள் இவை. இவற்றுள் மிகச் சரியான செயற்பாடு
   (1) திருவிவிலியத்தை அடிக்கடி வாசித்தல்
   (2) திருப்பாலர் சபையில் செயற்பாடுடைய அங்கத்தவராதல்
   (3) ஞாயிறு திருப்பலியில் கருத்துடன் பங்குகொண்டு நற்கருணைப் பெற்றுக்கொள்ளுதல்
   (4) மறைபாடசாலையில் திருவிவிலிய பாடத்தில் பங்குகொள்ளல்

12. ஒப்புரவு அருளடையாளத்தைப் பற்றிக் கலந்துரையாடி அது பற்றிக் கீழ்க் கண்டவாறு அறிவிக்கப்பட்டது. அதன்படி இவ் அருளடையாளம்
   (1) நற்கருணை பெறுவதற்கு ஆயத்தம் செய்கிறது.
   (2) மற்றவர்களுடன் உறவு கொள்ள உதவுகிறது.
   (3) உள்ளார்ந்த மனமாற்றத்தின் வழியாக வாழ்க்கையை மாற்றுகிறது.
   (4) பாவத்திற்கு மன்னிப்பைப் பெற்றுத்தருகிறது.

13. மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று. அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் (தொ.நூ. 2/18) இதன் சரியான கருத்து
   (1) மனிதன் தனிமையாக இருக்கக்கூடாது. (2) எல்லா மனிதருக்கும் துணைவியர் வேண்டும்.
   (3) மனிதன் சமூகமாக வாழ அழைக்கப்பட்டவன். (4) மனிதன் கட்டாயம் திருமணம் செய்ய வேண்டும்.

14. துறவற வாழ்வு பற்றிய பாட கலந்துரையாடலின்போது அது பற்றிய பிள்ளைகளின் கருத்துக்களில் சரியானது
   (1) துறவறத்தோர் கிறிஸ்துவுக்கு சான்று பகர்பவர்களாக மக்களுக்குப் பணியாற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள்
   (2) சபைத்தலைவருக்கு கீழ்ப்படிந்து வாழ்பவர்கள்
   (3) துறவற சபைக்குள் குழு வாழ்வை அனுபவிப்பவர்கள்.
   (4) மேற்கூறிய அனைத்தின்படியும் வாழ்பவர்கள்.

15. கிறிஸ்தவ பொதுநிலையினர் தமது மறைபணிக்காக அழைப்பைப் பெற்றுக் கொண்டது
   (1) அவர்கள் பெற்றுக்கொள்ளும் நற்கருணை அருளடையாளத்தின் வழியாக
   (2) அவர்களது சமூக நிலைப்பாட்டினால்
   (3) அவர்களது திருமுழுக்கு அருள் அடையாளத்தின் வழியாக
   (4) அவர்களின் தன்னம்பிக்கையினால்

16. 30 வருடங்களாக மரியாயின்சேனை அங்கத்தவராகப் பணியாற்றிய மாகிரட் என்பவரை ஞாயிறு பூசையின் பின் பங்குத்தந்தைப் பெரிதாகப் பாராட்டினார். இதனால்
   (1) பொதுநிலையினரின் மறைத்தூதுப்பணி ஊக்குவிக்கப்படுகிறது.
   (2) மரியாயின் சேனை பணி மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.
   (3) தேவ அழைப்புக்கு பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
   (4) மரியாயின்சேனை அங்கத்தவரின் தொகை அதிகரிக்க முயற்சி செய்யப்படுகிறது.

17. திருவழிப்பாட்டின் முக்கிய பிரிவுகள்
   (1) திருப்பலி, அருளடையாளம், திருப்புகழ்மாலை
   (2) திருப்பலி, குணமளிக்கும் ஆராதனை, திருப்புகழ்மாலை
   (3) இறைவார்த்தைப் பகுதி, காணிக்கை ஒப்புக்கொடுத்தல், விசுவாசிகளின் மன்றாட்டு
   (4) திருப்புகழ்மாலை, காணிக்கை, செபமாலை சொல்லுதல்

18. பொதுநிலையினர் மட்டும் அளிக்கின்ற அருளடையாளம்
   (1) நோயில்பூசுதல் (2) நற்கருணை (3) திருமணம் (4) திருமுழுக்கு

[பக். 3 ஐப் பார்க்க

19. புதிய ஏற்பாட்டில் உன்னத குரு
(1) மெல்கிசதெக் (2) சக்கரியா (3) திருமுழுக்கு அருளப்பர் (4) இயேசுக்கிறிஸ்து

20. பவுலடியார் கிறிஸ்தவ குடும்பத்திலுள்ள அன்புறவை ஒப்பிடுவது
(1) கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் உள்ள உறவு என (2) திராட்சைச் செடியும் கொடிகளும் என
(3) உலகில் ஒளியும் உப்பும் என (4) இருளுக்கும் ஒளிக்கும் உள்ள உறவு என

21. பேதுரு அருளுரை ஆற்றுவதற்கு உந்தப்பட்ட காரணம்
(1) திருச்சபைக்கு தலைமைத்துவம் வகிக்க வேண்டும் என்ற நோக்கத்தினால்
(2) தூயஆவியின் வழிகாட்டலினால்
(3) இயேசு கேட்டுக் கொண்டதால்
(4) சீடருக்கு முன்மாதிரிகையாயிருக்க வேண்டும் என்பதால்

22. மனிதத்துவத்திற்கு மதிப்பளிக்க வேண்டுமாயின் ........................... வாழ வேண்டும். இடைவெளிக்குப் பொருத்தமானது
(1) இறைவனின் கொடைகளின்படி (2) இறையன்பின்படி
(3) மனச்சான்றின்படி (4) இறைகட்டளையின்படி

23. உண்மையின்படி வாழ்ந்து உண்மைக்குச் சான்று பகர வேண்டுமாயின்
(1) உண்மைக்கு எதிரான செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.
(2) பொய்யான செய்திகள் பரப்புவதைத் தவிர்க்க வேண்டும்.
(3) வதந்திகள் பரவுவதைத் தடுக்க வேண்டும்.
(4) சந்தர்ப்பவாதியாக செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

24. செபத்தை வாழ்வுடன் இணைத்துக் கொள்வதால்
(1) இறைசித்தத்திற்கேற்ப தமது பொறுப்புகளை நிறைவேற்ற வலிமை கிடைக்கிறது.
(2) வாழ்வின் சுமைகளை குறைத்துக்கொள்ள முடிகிறது.
(3) மற்றவர்களுடன் அன்பாக வாழமுடிகிறது.
(4) இறையன்பைத் தமக்கு உரிமையாக்கிக் கொள்ளமுடிகிறது.

25. கத்தோலிக்க மாணவி ஒருவர் தனது பிறமத நண்பிக்கு திருப்பலி பற்றி இவ்வாறு அறிமுகப்படுத்தினார். இவற்றில் சரியானது
(1) திருப்பலி என்பது முதல் கிறிஸ்தவர்களின் ஒருமைப்பாட்டை இன்றைய காலத்திற்கும் கொண்டுவருவது
(2) திருப்பலி, மக்களை ஒன்று சேர்த்து செய்யும் ஆராதனை
(3) கல்வாரிப் பலியை இன்றைய காலத்திற்கும் கொண்டு வருதல்
(4) காணிக்கை சேர்க்கும் முறை

26. இறைவனுடன் ஆழமான உறவு கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தைக் காட்ட இயேசு கூறிய உவமை
(1) விதைப்பவன் உவமை (2) காணாமற்போன திராக்மா உவமை
(3) திராட்சை செடி, கொடி உவமை (4) காணாமற்போன ஆடு பற்றிய உவமை

27. மலைப்பொழிவின் மூலம் இயேசு கற்பிப்பது யாதெனில்
(1) மிகவும் சிறப்பான முறையில் வாழ்வைக் கட்டியெழுப்பும் முறை
(2) மகிழ்ச்சியுடன் வாழும் முறை
(3) வாழ்விலே சௌகரியம் வளம் அனைத்தையும் இவ்வுலகில் அடைந்துகொள்ளும் வழி
(4) கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் பேறுமிக்க வாழ்வை உரிமையாக்கிக்கொள்ளும் வழி

28. விண்ணரசுக்கு உரிமையுடையோர்
(1) பொய்பேசாதோர். (2) நிதமும் செபிப்பவர்கள்.
(3) நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர். (4) அமைதியாக இருப்போர்.

29. இறைவன் பத்துக் கட்டளை அளித்ததன் நோக்கம்
(1) மனிதனின் முரட்டுப்பிடிவாதத்திற்காகத் தண்டனையளித்து நல்வழியில் அவனை நடக்கச் செய்வது
(2) மனிதனை அவனது மேன்மையான நிலையைப் பாதுகாக்கும் விதத்தில் வாழச் செய்வது
(3) தனது பிழையை மனிதன் புரிந்துகொள்ளச் செய்வது
(4) இறைவனின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவது

30. பழைய ஏற்பாட்டுச் சட்டத்தைப் பின்பற்றுவதால் மட்டும் மனிதர் நிறைவுள்ளவராக முடியாது என்பதை இயேசு உணர்த்தியது
(1) நூற்றுவர் தலைவனுக்கு (2) பரிசேயருக்கு
(3) பேதுருவுக்கு (4) செல்வரான இளைஞருக்கு

31. தற்கொலை புரிபவர் செய்கின்ற பெருந்தவறு
(1) இறைவனுக்குச் சொந்தமான வாழ்வை உரிமையைப் பறித்தெடுத்தல்
(2) வாழ்வின் சவால்களுக்கு துணிவுடன் முகங்கொடுக்காமை
(3) வாழ்வின் பெறுமதியை அலட்சியம் செய்தல்
(4) தான் வாழுகின்ற மனித சமுகத்தை ஏற்றுக்கொள்ளாமை

[பக். 4 ஐப் பார்க்க

09214

32. விண்ணரசின் அடித்தளமாய் அமைவது
 (1) விசுவாசம், ஞானம், இறையன்பு
 (2) எதிர்பார்ப்பு, இறையன்பு, மன்னிப்பளித்தல்
 (3) இறையன்பு, விசுவாசம், தாழ்மை
 (4) விசுவாசம், எதிர்பார்ப்பு, அன்பு

33. மனித வாழ்வின் இறுதி எதிர்பார்ப்பு
 (1) இறைவனை முகமுகமாய்த் தரிசித்தல்
 (2) தனது கடமைகளைச் சரியான விதத்தில் செய்து முடித்தல்
 (3) தனது பிள்ளைகளுக்கு நன்கு சேமித்து வைத்தல்
 (4) நன் மரணம் பெற்றுக்கொள்ளுதல்

34. வடக்கில் இல்லிடமின்றி முகாம்களில் இருக்கும் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் அனுப்புவதற்கு 11 ஆந் தர மாணவர் தலைவி சிபாரிசு செய்து திட்டமிட்டார். அவரது செயல் ........................ பேறுபெற்றோர் என்ற இயேசுவின் படிப்பினையாகும். இடைவெளிக்குப் பொருத்தமானது
 (1) கனிவுடையோர்
 (2) இரக்கமுடையோர்
 (3) அமைதியேற்படுத்துவோர்
 (4) தூய்மையான உள்ளத்தோர்

35. தனது வயல் விளைச்சலின் கவலைகொண்டு மற்றவரின் வயலிலே வளமான விளைச்சலைக் கண்டு ஏங்குகின்ற விவசாயி மீறுவது
 (1) பிறர் உடைமையை விரும்பாதே என்ற படிப்பினையை
 (2) களவு செய்யாதே என்ற படிப்பினையை
 (3) எளியமனதோர் பேறுபெற்றோர் என்ற படிப்பினையை
 (4) முயற்சியுடையோர் வெற்றி பெறுவர் என்ற படிப்பினையை

36. தாழ்மையான உள்ளத்தோடு இறைவனை நாடுவோர் பேறுபெற்றோர். - இப்படிப்பினையின்படி வாழ்பவர்கள் யாரெனில்
 (1) இறை விசுவாசத்தினால் தைரியமாகக் கதைப்பவர்கள்
 (2) நற்செய்தியைக் கேட்டு அதன்படி நற்சீவியம் சீவிப்பவர்கள்
 (3) பங்கு மன்றங்களில் தலைமைத்துவம் ஏற்று செயற்படுபவர்கள்
 (4) எப்போதும் இறைபாதுகாப்பில் வாழ்பவர்கள்

37. திருநாள் காலத்திற்கான திருவழிபாட்டில் பங்குக் குரு ஒரு நாளை பச்சாதாப நாளாக ஏற்பாடு செய்தார். அன்று அளித்த அருளடையாளத்தினால் பங்கு மக்கள் பெற்ற அருள்
 (1) பாவங்களுக்கு மன்னிப்பு
 (2) உள்ளார்ந்த அமைதி
 (3) மீண்டும் நாம் பாவம் செய்யாதிருக்க வலிமை
 (4) பாவ மன்னிப்பும் ஆன்மீக நலமும்

38. ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கான சரியான ஒழுங்குமுறையைத் தெரிவு செய்க
 (1) பாவம் செய்யாதிருக்க உறுதி, பாவத்தை நினைத்தல், மனம் வருந்துதல், பாவத்தைக் குருவுக்கு அறிக்கையிடல், பரிகாரம் பெறுதல்
 (2) பரிகாரம் பெறுதல், பாவத்தை நினைத்தல், பாவம் செய்யாதிருக்க உறுதி, பாவத்தைக் குருவுக்கு அறிக்கையிடல், மனம் வருந்துதல்
 (3) பாவத்தை நினைத்தல், மனம் வருந்துதல், பாவம் செய்யாதிருக்க உறுதி, பாவத்தைக் குருவுக்கு அறிக்கையிடல், பரிகாரம் பெறுதல்
 (4) மனம் வருந்துதல், பாவத்தைக் குருவுக்கு அறிக்கையிடல், பாவம் செய்யாதிருக்க உறுதி, பரிகாரம் பெறுதல், பாவத்தை நினைத்தல்,

39. தவறான வழியில் சென்று தவறிலேயே வாழ்ந்த ஒரு பெரியவர் பங்குக் குருவைச் சந்தித்து தனது கடந்த கால வாழ்வைப் பற்றிக் கூறினார். அவ்வேளையில் அவர், நன்மையையும் தீமையையும் பகுத்தறிய தனக்குத் துணைபுரிந்தவை
 (1) பத்திரிகை, அயலவர், பெரியோர் எனக் கூறினார்.
 (2) எட்டுப்பேறு, நண்பர், பெற்றோர் எனக் கூறினார்.
 (3) மனச்சான்று, பத்துக்கட்டளை, எட்டுப்பேறு எனக் கூறினார்.
 (4) நண்பர், சூழ உள்ள நிகழ்வுகள், சட்டதிட்டங்கள் எனக் கூறினார்.

40. இன்றைய உலகில் நாம் செயற்பட வேண்டியது
 (1) மேன்மையாளராவதற்கு
 (2) நற்பெயரைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
 (3) செல்வத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்துவதற்கு
 (4) இறைவனுக்குச் சான்றுபகர்வதற்கு

❋❋

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2009 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2009

## கத்தோலிக்கத் திரு மறை II

※ முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. (i) குல முதுவர் ஆபிரகாமின் வாழ்வில் காணப்பட்ட விசேட பண்பு யாது ?
   (ii) குருத்துவ அருளடையாளம் வழங்கப்படும் சடங்கின்போது காணக்கூடிய முக்கிய பிரிவுகள் இரண்டு எழுதுக.
   (iii) இறைவன் மனிதருக்குத் தன்மை வெளிப்படுத்திய விதம் இரண்டு எழுதுக.
   (iv) திருமண அருளடையாளம் பற்றி இயேசுவின் படிப்பினை யாது ?
   (v) திருமுழுக்கின் மூலம் தரப்படும் பொதுக் குருத்துவத்தின் வழியாக அளிக்கப்படும் பணிகள் இரண்டு எழுதுக.
   (vi) ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக இறைவனிடம் மீண்டும் வருவதற்குத் தேவையான அடிப்படை காரணிகள் இரண்டு எழுதுக.
   (vii) திருச்சபையின் கட்டளைகள் இரண்டு எழுதுக.
   (viii) அநீதியான முறையில் களவு பொருட்களை கொள்முதல் செய்து அவற்றை ஒளித்து வைத்திருக்கும்போது மீறப்படும் கட்டளைகள் இரண்டு எழுதுக.
   (ix) தியானம் செய்வதற்கு இன்றியமையாதது எது ?
   (x) பர்னபா, சவுல் ஆகியோரை மறைபணிக்காக அனுப்புமுன் திருத்தூதர்கள் என்ன செய்தார்கள் ? இரண்டு விடயங்கள் எழுதுக.
   (2 × 10 = 20 புள்ளிகள்)

2. (i) தொடக்க நூலில் குறிப்பிடுவதன்படி மனிதன் படைப்புக் கதை இரண்டைப் பெயரிடுக.
   (ii) ஆதாம், ஏவாள் இறைவனுக்கு எதிராக செயற்பட்டதால் இழந்த வரங்கள் மூன்றை எழுதுக.
   (iii) இறைவனின் படைப்பாகிய நீர் சமூகத்திற்கு அளிக்கக்கூடிய செயற்பாடுகள் ஐந்தை 75 சொற்களில் விளக்குக.
   (10 புள்ளிகள்)

3. (i) நீர் பெற்றுள்ள தூய ஆவியின் கனிகள் இரண்டு எழுதுக.
   (ii) தூய ஆவி திருத்தூதரில் எழுந்தருளிய நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.
   (iii) முதல் கிறிஸ்தவ சமூகத்தில் சமூக எழுச்சி ஏற்படுவதற்கு தூய ஆவியின் வருகை காரணமாயிருந்தது. இதனை உறுதிப்படுத்துவதற்கு ஐந்து காரணிகள் தந்து 75 சொற்களளவில் விளக்குக. (10 புள்ளிகள்)

4. (i) பெரிய வியாழன் அன்று இயேசு ஏற்படுத்திய அருளடையாளங்கள் இரண்டு எழுதுக.
   (ii) நற்கருணை பெற்றபின் சொல்லக்கூடிய நன்றி செபம் ஒன்றைச் சுருக்கமாக எழுதுக.
   (iii) பணிக் குருத்துவத்தின் வழியாக பங்கிலே குருவானவர் நிறைவேற்ற வேண்டிய ஐந்து பணிகளை விளக்குக.
   (10 புள்ளிகள்)

5. (i) பரலோக மந்திரத்தில் காணப்படும் விசேட பண்புகள் இரண்டு எழுதுக.
   (ii) யோவா 17 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்படும் இயேசுவின் வேண்டலில் அடிப்படைப் பண்புகள் மூன்று எழுதுக.
   (iii) அடிக்கடி செபிப்பதன் முக்கியத்துவத்தைக் காட்டிய இயேசுவின் படிப்பினையின்படி உமது அன்றாட வாழ்வை அமைத்துக்கொள்ளும் விதத்தை ஐந்து காரணிகள் தந்து காட்டுக. (10 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

6. (i) கிறிஸ்தவ குடும்பத்தை நிறைவடையச் செய்வதற்காக இறைவனால் அளிக்கப்பட்டுள்ள முக்கிய பணிகள் இரண்டு எழுதுக.

(ii) குடும்பமாகிய சமூகம் ஒரு மேன்மையான ஒன்றியமாவதற்கு ஏதுவான காரணிகள் மூன்று எழுதுக.

(iii) உமது இல்லத்தை கிறிஸ்து அரசர் குடியிருக்கும் இல்லமாக மாற்றுவதற்காகக் கீழ்க் காணும் சந்தர்ப்பங்களில் எவவாறு செயற்படுவீர் என்பதைச் சுருக்கமாக எழுதுக.

(அ) குடும்ப செபமாலை சொல்ல ஆயத்தமாகும்போது தொலைக்காட்சி பார்க்க விரும்புகின்ற வேளை

(ஆ) படிப்பதற்கு ஆயத்தமாகும்போது கையடக்கத் தொலைபேசியில் ஓர் அழைப்பு வரும் வேளை

(இ) உமது சகோதரன் உம்மை அநியாயமாக ஏசும்போது

(ஈ) குடும்பத்தில் அனைவரும் ஒன்றாக உணவருந்தும்போது ஒரு அங்கத்தவர் எப்போதுமே காலம் தாழ்த்துதல்

(உ) குடும்பத்தில் அனைவரினதும் தேவைகளுக்காக உள்ள பணம், உடைமைகளை குடும்பத்தில் ஒரு அங்கத்தவர் பிழையான விதத்தில் சுயநலம் கொண்டு துஷ்பிரயோகம் செய்யும்போது

(10 புள்ளிகள்)

7. கீழ்க்காணும் தலைப்புகளில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) புனித மெக்சி மில்லியன் கோல்பேயின் மானிட இரக்கம்

(ii) படைப்பையன்று படைத்தவரையே ஆராதிப்போம்.

(iii) மோசேயின் அழைப்பும் பணியும்

(iv) துறவற வாழ்வு

(v) நோயில்பூசுதலில் ஆன்மீக நலம் (10 புள்ளிகள்)

※※※